- நீங்கள் பின்தொடர் நியமனம் தவற விட்டால், உங்களை தொலைபேசி அல்லது கடிதம் மூலம் கிளினிக் தொடர்பு கொள்ளும்.

## முக்கியமான குறிப்புகள்:

- அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவரை சந்தித்து ஆலோசனை பெற வேண்டும்.
- ஆண்கள் பரிசோதனைக்கு முன்பு குறைந்தது ¹ மணி நேரம் வரை சிறுநீர் கழிக்காமல் இருப்பது அவசியம்.
- நோய் குணமடையும் வரை உடலுறவு கொள்வதைத் தவிர்க்கவும்.
- தானாக மருந்து உட்கொள்வதைத் தவிர்க்கவும். இது அறிகுறிகளை மறைத்துவிடும்.
- ஏதேனும் ஒவ்வாமை இருப்பின் அதை மருத்துவரிடம் தெரியப்படுத்தவும்.
- உங்கள் துணையையும் பரிசோதனை மேற்கொள்ளச்செய்வது அவசியம்.
- போதிய நோய் எதிர்ப்பு சக்தி இல்லாதபோது மீண்டும் நோய்த்தொற்று ஏற்படலாம். எனவே தொடர் பரிசோதனை அவசியம்.


பாதுகாப்பான செக்ஸ் கடைபிடிக்கவும்

- உடல் திரவங்கள் பரிமாற்றம் இல்லாமல் செக்ஸ் (யோனி சுரப்பு மற்றும்விந்து).
- தவறாமல் ஆணுறை ஒவ்வொரு முறையும் பயன்படுத்தவும்
- செக்ஸ் முன் அல்லது போது அதிக அளவில் மது குடிக்க தவிர்க்கவும், இது உங்கள் கவனத்தை பாதிக்ககூடும்.

## பொறுப்புத்துறப்பு:

நாங்கள் இந்த நோயாளி தகவல் சிற்றேற்றில் தற்போதைய மருத்துவ சான்றுகள் மற்றும் கருத்துகள் அடிப்படையில், முழு மற்றும் சரியான விபரங்களை வழங்க முயற்சி செய்துள்ளோம். எனினும், தகவல் மற்றும் ஆலோசனைகள் பல்வேறு ஆதாரங்களில் இருந்தும், காலப்போக்கிலும் மாறுபடலாம். உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், உங்கள் மருத்துவர் அல்லது சுகாதாரச்சேவை வழங்குநரை அணுகவும்.

## எங்கள் இடங்குறிப்பு




**DSC கிளினிக்**

31 Kelantan Lane #01-16 S(200031)

## பஸ் சேவைகள்

23, 64, 65, 66, 67, 130, 139, 147, 857

Bugis (EWL/DTL)

Rochor (DTL)

Lavender (EWL/DTL)

Farrer Parkr (DTL)

## எங்களுடன் சந்திப்பு முன்பதிவு செய்ய

சந்திப்பு முன்பதிவு மையத்தை அழைக்கவும்
6293 9648

அல்லது மின்னஞ்சல் மூலம்
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
apptdsc@nsc.com.sg

மேலும் மருத்துவகம் தகவல் கிடைக்க எங்கள் இணையதளம் WWW.DSC-CLINIC.SG
அல்லது எங்கள் FACEBOOK - WWW.FACEBOOK.COM/DSCSG

G-T-I
Printed - August 2016

# மேகவெட்டை நோய் (GONORRHOEA)

NATIONAL SKIN CENTRE

DSC Clinic

## மேகவெட்டை நோய் என்பது என்ன?

வெட்டை நோய் என்பது பாலினச் சேர்க்கையின் போது பாக்டீரியா தொற்றினால் பரவும் நோய் ஆகும். ஆண்,பெண் இருபாலருக்கும் இந்நோய் ஏற்படும்.

## மேகவெட்டை நோய் பரவும் விதம்

- வெட்டை நோய் உள்ளவரிடம் உடலுறவு கொள்வதால் பரவுகிறது( வாய் வழி, பிறப்புறுப்பு அல்லது மலவாய் வழியாக உடலுறவு கொள்தல்)
- வெட்டை நோய் உள்ள தாயிடமிருந்து குழந்தைக்குப் பரவுகிறது.

## மேகவெட்டை நோய் பரவும் விதம்

பொதுவாக இந்நோய் பாதிக்கப்பட்டவருக்கு வெளியில் தெரியும்படியான அறிகுறிகள் எதுவும் தோன்றுவதில்லை.

| ஆண் | பெண் |
|---|---|
| • ஆண்குறியில் திரவம் வடிதல் (வெள்ளை அல்லது மஞ்சள் நிறம்)<br>• சிறுநீர் கழிக்கும் போது வலி மற்றும் எரிச்சல் ஏற்படுதல்<br>• மலவாயில் நீர்வடிதல் (குத செக்ஸ்) | • பெண்குறியில் திரவம் வடிதல் (வெள்ளை அல்லது மஞ்சள் நிறம்)<br>• சிறுநீர் கழிக்கும் போது வலி<br>• யோனியில் இருந்து அசாதாரணமான இரத்தப் போக்கு<br>• மலவாயில் நீர்வடிதல் (குத செக்ஸ்) |

குழந்தைகள்:

குழந்தைகளுக்கு இந்நோய் பாதிப்பு கண்பார்வை இழப்பை ஏற்படுத்துகிறது.

## அறிகுறிகள் தோன்றுவது எப்போது?

நோய்த்தொற்று ஏற்பட்டு 2 முதல் 7 (அல்லது நீண்டநாள்) நாட்களில் அறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கும். தொண்டை மற்றும் மலக்குடலில் தொற்று ஏற்படும் போது அறிகுறிகள் தென்படுவதில்லை. பெண்களுக்கு இத்தொற்று ஏற்படும் போது அறிகுறிகள் மிதமாக இருக்கும்.

## யாருக்கு பரிசோதனை தேவை ?

மேற்கூறிய அறிகுறிகள் தென்படும் போது பரிசோதனை மேற்கொள்வது அவசியம்.

## வெட்டை நோய் கண்டறிவது எப்படி?

- ஸ்வாப் மாதிரியின் மூலம் - மருத்துவ தாதியாளர் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து ஒரு பருத்தி துடைப்புத்துண்டு குச்சியால் மாதிரியை சேகரிக்கப்பார்
- சிறுநீர் மாதிரியின் மூலம்.

(DSC கல்சர் மற்றும் PCR சோதனைகளை செய்கிறது)

## வெட்டை நோய் குணப்படுத்தக்கூடியதா?

வெட்டை நோய் குணப்படுத்தக்கூடிய ஒன்றே. எதிர் உயிரிகள் மற்றும் ஊசிகளை எடுத்துக்கொள்வதன் மூலம் இந்நோயைத் தடுக்கலாம். சில வெட்டை நோய் எதிர் உயிரி மருந்துகளுக்கு கட்டுப்படுவதில்லை.

வெட்டை நோய் உள்ள ஒருவருடன் உடலுறவு கொள்ளும் போது பரவுகிறது.உடலுறவுக் கொள்ளும் இரு நபர்களிடையே எளிதாக பரவுவதால், நீங்களும் உங்களுடைய துணையும் ஒரே சமயத்தில் சிகிச்சை எடுத்துக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறது.

## வெட்டை நோய் வேறு பாதிப்புகளை ஏற்படுத்துமா?

| ஆண் | பெண் |
|---|---|
| • விரைவீக்கம் ஏற்படும் (விந்தகம் மற்றும் விந்துக்குழாயில் வலி, வீக்கம் ஏற்படுதல்) | • இடுப்பு அழற்சி நோய் (PID) - கருப்பை மற்றும் கருக்குழாய்களில் ஏற்படும் தொற்றினால், வயிற்று வலி, கருக்குழாய் சேதம், மலட்டுத்தன்மை மற்றும் அசாதாரண கர்ப்பம் ஏற்படும் |

ஆண் மற்றும் பெண்:

ஆண், பெண் இருபாலருக்கும் இரத்த ஓட்டம், மூட்டு, தோல் மற்றும் இதயம் போன்ற உறுப்புகளில் நோய் தொற்று ஏற்படுகிறது.

## கர்ப்பகாலத்தில் வெட்டை நோய்

கர்ப்பிணிப் பெண்ணிற்கு கொனேரியா இருந்தால் பிறக்கும் குழந்தைக்கும் நோய் பரவுகிறது. கண்களில் தொற்று ஏற்பட்டு பார்வை இழப்பு ஏற்படுகிறது.

## தொடர் பரிசோதனைக்கு மீண்டும் வர வேண்டுமா?

- தொடர்ச்சியான சிகிச்சை பெறுவது நோய் முற்றிலும் குணமடைந்ததா என்பதை கண்டறிய உதவும்.
- நோய் உறுதி செய்யப்பட்டால் சிகிச்சை எடுத்த நாளில் இருந்து 14 நாட்களுக்குள் பரிசோதனை அவசியம்.
- தொடர்ச்சியாக சிகிச்சைக்கு வரும் போது பரிசோதனைகள் மீண்டும் செய்யப்படுகிறது.
- மேக புண்(syphilis) மற்றும் எச்.ஐ.வி. சோதனைக்கு 3 - வது மாதம் முன்பதிவு வழங்கப்படும்.